சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை: **திரு.M.மணிகண்டன், M.A., M.L., PG.D.C.F.Sc.,**
சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 04 ம் நாள்)

**மேல்முறையீட்டு அசல் வழக்கு எண். 17/2024**
**CNR No.TNCB11-001078-2024**

1. உமா தேவி
2. இந்திரா தேவி ... மேல்முறையீட்டாளர்கள் / 6, 7 பிரதிவாதிகள்

/ எதிர் /

1. S.சம்பூரணம்
... 1ம் எதிர்மனுதாரர் / வாதி
2. M.சிவபாக்கியம்
3. K.ஆறுமுகம்
4. K.கவிதா
5. கிருஷ்ணசாமி
6. T.ஸ்ரீகுமார் ... எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.465/2006 வழக்கில் 20.06.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 6, 7 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்ற அசல் வழக்கு எண். 465/2006**

S. சம்பூரணம் ... வாதி

/ எதிர் /

1. M.சிவபாக்கியம்
2. K.ஆறுமுகம்
3. K.கவிதா

4. கிருஷ்ணசாமி
5. T.ஸ்ரீகுமார்
6. உமா தேவி
7. இந்திரா தேவி ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 09.04.2026ம் தேதியன்று இறுதியாக இந்நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார், பி.காம்., பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.P.K.ரவீந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.V.லிங்கராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.M.ரமேஷ் அவர்கள் முன்னிலையாகியும் பின்னிட்டு, இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

1) இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.465/2006 வழக்கில் 20.06.2024ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 6, 7 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>விசாரணை நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:</u>**

தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு காளியப்பகவுண்டருக்கு கடந்த 05.03.1955ம் தேதியிட்ட பாகப்பிரிவினை மற்றும் கடந்த 21.03.1962ம் தேதியிட்ட உயில்படி பாத்தியப்பட்டது என்றும், காளியப்பகவுண்டர், ராஜம்மாள் தம்பதியருக்கு சம்பூரணம் (வாதி), சிவபாக்கியம் (1ம் பிரதிவாதி) மற்றும் ஒரு வள்ளியம்மாள் என்ற 3 பெண்மக்களும், ஆறுமுகம் (2ம் பிரதிவாதி) மற்றும் ஒரு சிவசுப்பிரமணியம் என்ற 2 ஆண்மக்களும் உள்ளனர் என்றும், அதில் சிவசுப்பிரமணியம் திருமணம் ஏதும் செய்துகொள்ளாமல் இறந்துவிட்டார் என்றும், கடந்த 11.06.1978ம் தேதியன்று தாவா சொத்தின் 2வது அயிட்ட சொத்து வாதியின் தாயார் ராஜம்மாள் பெயரில் அவரது கணவர் காளியப்பகவுண்டர் கிரையம் பெற்றார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**2.2)** காளியப்பகவுண்டர் தனது மனைவி ராஜம்மாள் மற்றும் அவரது வாரிசுகளை விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், பின்னிட்டு ராஜம்மாளும் சிவசுப்பிரமணியமும் இறந்துவிட்டனர் என்றும், ஆகவே, தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/4 பங்கு உரிமையுள்ளது என்றும், மேற்படி பங்கு உரிமையை வாதி பிரித்து தரும்படி கேட்டபோது பிரதிவாதிகள் மறுத்துவிட்டதால் கடந்த 17.03.2005 தேதியன்று பிரதிவாதிகள் மற்றும் ராஜம்மாள் பெயருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும் மேற்படி அறிவிப்பை ராஜம்மாள் மற்றும் 2ம் பிரதிவாதி தவிர்த்து மற்ற பிரதிவாதிகள் பெற்றுகொண்டனர் என்றும், அதில் 1ம் பிரதிவாதி கடந்த 28.03.2003 தேதியன்று தனது வழக்கறிஞர் மூலம் பதிலறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த பதில் அறிவிப்பில் சிவசுப்பிரமணியம் அவரது சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியின் மகள்கள் பெயருக்கு உயில்

எழுதி வைத்துள்ளதாக தெரிவித்திருந்தார் என்றும், மேற்படி உயில் போலியாக தயாரிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

**2.3)** ராஜம்மாள் இறந்தபிறகு வாதி மீண்டும் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பி அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பை 2ம் பிரதிவாதி தவிர, மற்ற பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டனர் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 4ம் பிரதிவாதி அவரது சொத்தை 5ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ததால் 5ம் பிரதிவாதி வழக்கில் கட்சிசேர்க்கப்பட்டுள்ளார் என்றும், மேலும், சிவசுப்பிரமணியம் 1ம் பிரதிவாதியின் மகள்கள் பெயரில் உயில் எழுதிவைத்துள்ளதால் அவர்கள் 5, 6 பிரதிவாதிகளாக கட்சிசேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், தாவாசொத்துக்களை பொறுத்து சிவசுப்பிரமணியம் 5, 6 பிரதிவாதிகள் பெயரில் உயில் எழுதிவைக்க உரிமையில்லை என்றும், ஆகவே, மேற்படி உயில் வாதியை கட்டுப்படுத்தாது என்றும், மேலும், 3ம் பிரதிவாதி தொடர்புடைய கடந்த 13.03.1987 மற்றும் 27.03.1987 தேதிகளிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் வாதியின் பங்கை கட்டுப்படுத்தாது என்றும், எனவே, வாதி வழக்குசொத்தில் தனக்குரிய பாகம் கோரி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) **<u>விசாரணை நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>**

தாவா சொத்துக்களில் ஓர் பகுதி காளியப்பகவுண்டருக்கு கடந்த 05.03.1955 தேதியிட்ட பாகசாசனப்படி பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டது என்றும், மற்றொரு பகுதி மேற்படி காளியப்பகவுண்டருக்கு அவரது தந்தை மாரிமுத்துகவுண்டர் எழுதி வைத்துள்ள பதிவு செய்யப்பட்ட உயில்சாசனம் மூலம் சுயராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டவை என்றும், தாவா இரண்டாவது அயிட்ட

சொத்துக்கள் வாதிக்கும், 1, 2 பிரதிவாதிக்கும் தாயாரான ராஜம்மாளுக்கு கிரய வகையில் தனிப்பட பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா சொத்துக்களில் ஓர் பகுதியை மேற்படி காளியப்பகவுண்டர் உயிரோடு இருந்த போதே அவரது ஆண் மக்களான சிவசுப்பிரமணியத்திற்கும், 2ம் பிரதிவாதிக்கு ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3.2)** பின்னர் சிவசுப்பிரமணியமும், 2ம் பிரதிவாதியும் காளியப்பகவுண்டர் இறந்த பிறகு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் பொது குடும்ப பைசல்தாரர்கள் பைசல்படி வாய்மொழியாக பாகம் பிரித்து தனிப்பட அனுபவித்து வந்தார்கள் என்றும், காளியப்பகவுண்டரின் பெண் மக்களான வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர்கள் இந்து வாரிசுரிமைச் சட்டம் (திருத்தம் 1989) அமுலுக்கு வருவதற்கு முன்னரே பல வருடங்களுக்கு முன்னரே திருமணம் நடைபெற்றுவிட்டது என்றும், காளியப்பகவுண்டர் இறந்ததும், அவரது மனைவி ராஜம்மாள், சிவசுப்பிமணியம் மற்றும் 2 பிரதிவாதி ஆகியோர்கள் மூவரும் சேர்ந்து காளியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஓர் பகுதியை இறந்துபோன வள்ளியம்மாளுக்கு 2 செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், அதில் சிவசுப்பிரமணியமும், 2ம் பிரதிவாதியும் சாட்சிகையெழுத்து செய்துள்ளார்கள் என்றும், வள்ளியம்மாள் காலமானது அவருடைய சட்டப்பூர்வ வாரிசுகளான 3, 4 பிரதிவாதிகள் சொத்தை 3ம் நபருக்கு கிரையம் கொடுத்து, பட்டா மாறுதலும் செய்து ஆண்டனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்படி சங்கதிகள் வாதிக்கு தெரிந்தும் வழக்கு சொத்தில் 1/4 பாகம் கோரியுள்ளார் என்றும், வாதி கடந்த 17.03.2005 தேதியன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி கடந்த 28.03.2005 தேதியன்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3.3)** சிவசுப்பிரமணியம் கடந்த 13.01.1994ம் தேதியன்று திருமணம் ஆகாமல் காலமாகிவிட்டார் என்றும், சிவசுப்பிரமணியம் இறப்பதற்கு முன்னரே கடந்த 12.12.1990ம் தேதியில் அவருக்கு பொது குடும்ப பைசல்படி பாத்தியப்பட்ட பொதுவில் சரிபாதி சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதியின் இரு பெண் மக்களான இந்திராதேவி மற்றும் உமாதேவி ஆகியோர்களுக்கு சரிசமமாக சேரத்தக்கவகையில் உயில்சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றும், அவ்வாறு உயில் எழுதிய விபரம் வாதி, ராஜம்மாள், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், பின்னர் சிவசுப்பிரமணியம் காலமானதும் மேற்படி உயில்சாசனம் அமுலுக்கு வந்து, வருவாய்துறை ஆவணங்களில் 5, 6 பிரதிவாதிகள் பட்டா பெயர் மாறுதல் செய்தனர் என்றும், மேலும், உயில் மூலம் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் களத்துச்சாளை கட்டி, மின் இணைப்பு பெற்று தென்னை பயிரிட்டு, ஆழ்குழாய் கிணறு அமைத்து பல மராமத்துகளை செய்து யாரது இடையுறுமின்றி ஆண்டனுபவித்து வருகின்றார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3.4)** மேலும், 2ம் பிரதிவாதி தனக்கு பைசல் மூலம் வந்த சொத்துக்கள் ராமபட்டிணம் கிராமத்தில் உள்ள பூமிகளை ஒரு இஸ்மாயில் என்பவருக்கு குத்தகைக்கு விட்டு அவர் காலமானதும் அவருடைய வாரிசுகள் குத்தைக்கு விவசாயம் செய்து வருகின்றார்கள் என்றும், மேலும், 2ம் பிரதிவாதிக்கு பொதுகுடும்ப பைசல்படி வாய்மொழி பாகப்படி வந்த மண்ணூர் கிராமத்தில் உள்ள பூமிகளை சின்னப்புள்ளை என்பவருக்கு கடந்த சில வருடங்களாக குத்தகைக்குவிட்டு விவசாயம் செய்து வருகின்றார்கள் என்றும், மேற்படி விபரம் வாதிக்கு நன்கு தெரிந்தும் கூட்டு அனுபோக சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், வழக்கு சொத்துக்களின் ஓர் பகுதியை 3, 4 பிரதிவாதிகள் 3ம் நபருக்கு விற்பனை

செய்துள்ளனர் என்றும், அவர்களை வழக்கில் கட்சிசேர்க்கவில்லை என்றும், ஆகவே, அவசியகட்சிகாரர்களை வழக்கில் கட்சிசேர்க்காத காரணத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3.5)** 1ம் பிரதிவாதியின் பெண் மக்கள் மண்ணூர் கிராமத்தில் உள்ள பூமிகளில் கூட்டுப்பட்டா எண்.37, 39 மற்றும் 40 ஆகியவைகளிலும், ராமபட்டிணம் கிராமத்தில் உள்ள பூமிகளில் கூட்டுப்பட்டா எண்.72 ஆகியவைகளில் வருவாய்துறையில் கூட்டாக பட்டா பெற்றள்ளார்கள் என்றும், 1ம் பிரதிவாதியின் ஒரு மகளான உமாதேவி ராமபட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் மேற்படி சொத்துக்களில் ஓர் பகுதியை அடமானம் வைத்து கடனும் பெற்றுள்ளார் என்றும், சிவசுப்பிரமணியத்தின் சொத்துக்களை வைத்து 1ம் பிரதிவாதியின் பெண் மக்கள் அனுபவித்து வருவதைகண்டு பொறாமைப்பட்டு, 2, 3, 4 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் வஞ்சககூட்டு சேர்ந்து வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், 1ம் பிரதிவாதியின் பெண்மக்களுக்கு, சிவசுப்பிரமணியம் எழுதி வைத்த உயிலை மறைத்தும், முன்னரே வாய்மொழியாக பாகம் ஆனதை மறைத்தும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3.6)** ராஜம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாதிக்கு பொதுவில் ¼ பங்கு உள்ளது என்றும், அதைப்பொறுத்து 1ம் பிரதிவாதி, வாதியுடன் சொத்தை பிரித்துக்கொள்ள தயாராக உள்ளார் என்றும், வழக்கு சொத்துவிபரம் தவறானது என்றும், வழக்கு சொத்து மதிப்பு ரூ.40,00,000/- என்றும், ஆனால் வாதி குறைத்து மதிப்பீடு செய்து வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. **<u>விசாரணை நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>**

தாவா சொத்துக்கள் வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தகப்பனாரான காளியப்பகவுண்டருக்கு கடந்த 05.03.1955ம் தேதியிட்ட பாகப்பத்திரப்படியும், கடந்த 21.03.1962ம் தேதியிட்ட அவரது தகப்பனார் எழுதிவைத்த உயில்சாசப்படியும் பாதியப்பட்டது என்றும், தாவா ஒன்றாவது அயிட்ட சொத்துக்களை இந்து கூட்டுகுடும்ப சொத்துக்களாக அனுபவித்து வந்து கடந்த 01.10.1984 தேதியன்று காலமாகிவிட்டார் என்றும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்து கடந்த 12.06.1978ம் தேதியிட்ட கிரையப்பத்திரப்படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றும், காளியப்பகவுண்டர், ராஜம்மாள் தம்பதியருக்கு வாதி, 1, 2 பிரதிவாதிகள் மற்றும் இறந்துபோன வள்ளியம்மாள், சிவசுப்பிரமணியம் ஆகியோர் மக்கள் என்றும், காளியப்பகவுண்டர் இறந்த காலத்தில் அவரது மகளான வள்ளியம்மாள் திருமணம் ஆகாமல் இருந்து வந்தார் என்றும், மேற்படி வள்ளியம்மாளுக்கு திருமணத்தின் பொருட்டு ஒரு ஏற்பாடு செய்து வைத்துவிட்டு பொது குடும்ப சொத்துக்களை 2ம் பிரதிவாதி, சிவசுப்பிரமணியமும் அடைந்துகொள்ளவேண்டியது என்று குடும்ப உறுப்பினர்களால் முடிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

**4.2)** அதன்படி கடந்த 13.03.1987ம் தேதியில் தாவா ஒன்றாவது அயிட்டச் சொத்துக்களில் ஒரு பகுதியான பொள்ளாச்சி வட்டம், ராமபட்டிணம் கிராமம் க.ச.214 நெ. காலையில் 4.69 ஏக்கர் பூமிகளையும் கடந்த 27.03.1987 தேதியில் க.ச.215/1 நெ. காலையில் 4.69 ஏக்கர் பூமிகளையும், கடந்த 27.03.1987ம் தேதியில் க.ச.215/1 நெ.காலையில் 1.74 ஏக்கர் உள்ள பூமிகளையும் மேற்படி வள்ளியம்மாளுக்கு இரண்டு தனிதனி செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம்

ராஜம்மாள் பதிவுசெய்து எழுதிவைத்துள்ளார் என்றும், மேற்படி 13.03.1987ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் 2ம் பிரதிவாதியும், மேற்படி சிவசுப்பிரமணியமும் சாட்சிகளாக கையொப்பமும் செய்து கொடுத்துள்ளனர் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் தேதியிலேயே மேற்படி சொத்துக்கள் வள்ளியம்மாளுக்கு சுவாதினமும் செய்து கொடுக்கப்பட்டது என்றும், ஒன்றாவது அயிட்ட மீதி சொத்துக்களை 2ம் பிரதிவாதி, சிவசுப்பிரமணியமும் தங்கள் பங்காக ஆளுக்குப் பாதியாகப் பிரித்து எடுத்துக்கொண்டுவிட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4.3)** சிவசுப்பிமணியம் திருமணம் செய்துகொள்ளாததால் 1ம் பிரதிவாதியின் மகள்களான உமாதேவி, இந்திரா தேவி ஆகியோருக்கு கடந்த 12.12.1990ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதிவைத்துவிட்டு கடந்த 13.01.1994 தேதியன்று இறந்துவிட்டார் என்றும், மேற்படி உயில்சாசனப்படி உமாதேவி, இந்திராதேவி ஆகியோர் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருகின்றனர் என்றும், 2ம் பிரதிவாதியின் சகோதரியான வள்ளியம்மாள் பின்னிட்டு 4ம் பிரதிவாதியை திருமணம் செய்துகொண்டார் என்றும், வள்ளியம்மாள் காலமானபின்னிட்டு வள்ளியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 3, 4 பிரதிவாதிகள் அனுபவித்து வந்துள்ளனர் என்றும், 2ம் பிரதிவாதியின் தாயார் ராஜம்மாள் தனியாக லேவாதேவி தொழில் செய்து வந்தார் என்றும், அதன் மூலம் கிடைத்த வருமானத்தில் தாவா இரண்டாவது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றார் என்றும், மேற்படி சொத்து பொதுகுடும்ப சொத்துக்களாக வாங்கப்பட்டதுபோல் பிராதில் குறிப்பிட்டுள்ள விபரம் தவறானது என்றும், 2ம் பிரதிவாதியின் தாயார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கடந்த 21.02.2005 தேதியில் 2ம் பிரதிவாதியின் மகனான வீரமணி என்பவருக்கு தனது ஆயுளுக்கு பின் அடையவேண்டியது என்று உயில்சாசனம்

எழுதிவைத்துள்ளார் என்றும், அதன்படி ராஜம்மாள் கடந்த 05.05.2005 தேதியில் காலமானபின் தாவா இரண்டாவது அயிட்ட சொத்துக்கள் மேற்படி வீரமணிக்கு பாத்தியப்பட்டது 2ம் பிரதிவாதியின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருந்து வருகிறது என்றும், வாதிக்கு மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம், உயில்சாசனம் ஏற்பட்ட காலங்களிலிருந்து நன்கு தெரியும் என்றும், பின்னிட்டு ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4.4)** வாதி தாவா சொத்துக்களில் மற்றொரு பகுதிக்கு சட்டப்படி உரிமையாளர்களான உமாதேவி, இந்திராதேவி, வீரமணி ஆகியோரை வழக்கில் கட்சிசேர்க்கவில்லை என்றும், வாதிக்கு இந்துவாரிசுரிமை சட்டத்தின் திருத்தம் அமுலுக்கு வரும் முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றும், ஆகவே, மத்திய, மாநில இந்து வாரிசுரிமை திருத்தசட்டங்களின் பலன்கள் எதுவும் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்றும், மேலும், வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய காலத்தில் குடும்பத்துக்கு வேண்டியவர்கள் மூலம் மேற்படி விபரங்கள் எடுத்துகூறப்பட்டதால், 2ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றும், வாதிக்கு வழக்கு சொத்தில் எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல. என்றும் எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

5. **<u>விசாரணை நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>**

ராஜம்மாள் தனது கணவர் காளியப்பகவுண்டர் இறந்த பின் திருமணமாகாமல் இருந்த பிரதிவாதியின் தாயார் வள்ளியம்மாளுக்கு வழக்கு சொத்துக்களில் ஒரு பகுதி சொத்துக்களை 13.03.1987 மற்றும் 27.03.1987 ஆகிய தேதிகளில் இரு செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் கொடுத்துவிட்டார்

என்றும், காளியப்பகவுண்டர் கூறியபடியும், மற்ற குடும்ப உறுப்பினர்களும் வாதி உட்பட ஒருமனதாக செய்து கொண்ட குடும்ப ஏற்பாட்டின்படியும் 3ம் பிரதிவாதியின் தாயாருக்கு, குடும்பத்தை நிர்வாகம் செய்தவர் என்ற அடிப்படையில் ராமாத்தாள் அவர்களால் எழுதிவைக்கப்பட்டது என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தும் வாதிக்கு தெரியும் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் பத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டபோதே நடைமுறைக்கு வந்து, 3ம் பிரதிவாதியின் தாயார் அனுபவித்து வந்தார் என்றும், பின்னர் 3ம் பிரதிவாதியின் தாயார் இறந்த பிறகு 3, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபவ சுவாதினத்தில் இருந்து வருகின்றது என்றும், ஆகவே, செட்டில்மெண்ட் பத்திரங்களில் உள்ள சொத்தான பொள்ளாச்சி தாலூக்கா, ராமபட்டணம் கிராமம் க.ச.214ல் பு.ஏ.4.67 மற்றும் க.ச.215ல் பு.ஏ.1.74 ஆக காலை 2க்கு மொத்தம் பு.ஏ.6.41 பூமிகளில் வாதிக்கோ மற்றும் எவருக்கோ தற்போது எந்த உரிமையும் இல்லை என்றும், 3ம் பிரதிவாதியின் தந்தையான 4ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்ததால் அவர் மீதி பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.26/2008 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**5.2)** மேலும், 4ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு தெரியாமல் ஒரு ஸ்ரீகுமார் என்பவருக்கு போலியாக கடந்த 05.06.2007 தேதியில் கிரையப்பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றும், தாவா சொத்துக்களில் மேற்படி செட்டில்மெண்ட் சொத்துக்கள் தவிர பிற சொத்துக்கள் குறித்து வாதிக்கு பரிகாரம் வழங்க 3ம் பிரதிவாரிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும், மேலும், 3ம் பிரதிவாதிக்கு அச்சொத்துக்களில் ¼ பங்கு பாத்தியம் உள்ளது என்றும், தாவா தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37 (2) ன் கீழ் மதிப்பீடு

செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

6. **<u>விசாரணை நீதிமன்றத்தில் 4ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>**

காளியப்பகவுண்டர் கடந்த 01.10.1984ம் தேதியன்றும், அவரது மனைவி ராஜம்மாள் கடந்த 05.05.2005 தேதியன்றும் இறந்துவிட்டார்கள் என்றும், காளியப்பகவுண்டர் உயிருடன் இருக்கும் சமயத்தில் சில சொத்துக்களை அவரது மனைவி ராஜம்மாளுக்கு ஒதுக்கியிருந்தார் என்றும், ராஜம்மாள் உயிருடன் இருக்கும்போது அப்போது திருமணமாகாமல் இருந்த தனது மகளான வள்ளியம்மாளுக்கு ஏற்பாடு செய்து வைக்க கடந்த 13.03.1987 மற்றும் 27.03.1987 தேதிகளிட்ட இரண்டு செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் சொத்துக்களை பாத்தியப்படுத்தினார் என்றும், ராஜம்மாளும், தனது கணவரும் மேற்படி வள்ளியம்மாளுக்கு சொத்துக்களை பாத்தியப்படுத்த விரும்பியதாக கடந்த 05.05.2005 தேதிய செட்டில்மெண்ட் பத்திரத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும், வள்ளியம்மாள், 4ம் பிரதிவாதியை திருமணம் செய்துகொண்டார் என்றும், அதன்பயனாக 3ம் பிரதிவாதி 1989ம் வருடம் பிறந்தார் என்றும், பின்னர் வள்ளியம்மாள் கடந்த 31.12.1990ம் வருடம் இறந்துவிட்டார் என்றும், வள்ளியம்மாளுக்கு செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், வள்ளியம்மாள் இறந்தபிறகு 4ம் பிரதிவாதி சொத்துக்களை பொறுத்து வருவாய்துறை ஆவணங்களில் தனது பெயருக்கு மாற்றம் செய்து 1990ம் வருடத்திலிருந்து அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி சங்கதி வாதி உட்பட பிரதிவாதிகள் அனைவருக்கும் தெரியும் என்றும், 3ம் பிரதிவாதி மேற்படி

செட்டில்மெண்ட் படி கிடைத்த சொத்துக்களை 4ம் பிரதிவாதியுடன் சேர்ந்து அனுபவித்து வந்தார் என்றும், பின்னர் 3ம் பிரதிவாதி பணதேவை ஏற்பட்டபோது சொத்துக்களை விற்க முடிவு செய்தார் என்றும், அப்போது ஒரு ஸ்ரீகுமார் என்பவருக்கு சொத்துக்களை வாங்க விரும்பினார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**6.2)** 4ம் பிரதிவாதி தனது பங்கான ½ பங்கு சொத்தை மட்டும் எல்லைகள் குறிப்பிட்டு மேற்படி ஸ்ரீகுமாருக்கு கடந்த 05.06.2007ம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், ஸ்ரீகுமாரும் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்றும், 3ம் பிரதிவாதி பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.26/2008 வழக்கில் மேற்படி சங்கதியை மறைத்து தாக்கல் செய்திருந்தார் என்றும், நாளதுதேதியில் 4ம் பிரதிவாதிக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், இந்நிலையில் அவசியமில்லாமல் 4ம் பிரதிவாதியை இவ்வழக்கில் கட்சிசேர்த்துள்ளார்கள் என்றும், வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய உடன் 4ம் பிரதிவாதி அவரது மனைவி வள்ளியம்மாளுக்கு அவரது பெற்றோர் விரும்பியே செட்டில்மெண்ட் செய்துவைத்தார்கள் என்பதை எடுத்துகூறியதும், வழக்கின் நடவடிக்கைகளை நிறுத்திவிடுவதாக உறுதி கூறிவிட்டு, மாறாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், ராஜம்மாள் எழுதிவைத்த சொத்தில் பாதி பங்கை மட்டும் 4ம் பிரதவாதி விற்பனை செய்துள்ளார் என்றும், வாதி நீதிமன்ற கட்டணம் சட்டம் 37 (2) ன்படி செலுத்தியுள்ள கட்டணம் தவறானது என்றும், வாதி சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும், வழக்கிற்கான வழக்கு மூலம் இல்லை என்றும், எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

7. **<u>விசாரணை நீதிமன்றத்தில் 5ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>**

தாவா சொத்துக்கள் முழுவதும் 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்துக்களில் 4ம் பிரதிவாதி விவசாயம் செய்து வந்தார் என்றும், மேற்படி பூமிகள் மேட்டுபூமிகள் ஆனதால் பருவ மழை பெய்யாததாலும் 4ம் பிரதிவாதிக்கு விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டது என்றும், அந்தசமயம் இளவராக இருந்த 3ம் பிரதிவாதியின் பராமரிப்பு செலவுக்கு சிரமப்பட்டுகொண்டிருந்த 4ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களை பொறுத்து 5ம் பிரதிவாதியுடன் கடந்த 29.10.2004ம் தேதியன்று கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், அதன்படி கிரைய தொகை பாதி 4ம் பிரதிவாதிக்கும், வாதி தொகை 3ம் பிரதிவாதியின் எதிர்காலத்திற்கும் பங்கி வைத்துகொள்ள முடிவுசெய்யப்பட்டது என்றும், 3ம் பிரதிவாதி இளவராக இருந்ததால் கோயமுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் மனுகொடுத்து மேற்படி மனு H.M.G.O.P.133/2004 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றும், மேற்படி நீதிமன்ற உத்தரவின்பேரில் அந்த மனு குறித்து அறிவிப்பு, தண்டோரே போடப்பட்டது என்றும், அதனால் கடந்த 19.04.2006ம் தேதியன்று இளவராக இருந்த 3ம் பிரதிவாதி பெயரில் வங்கியில் ரூ.1,61,500/– வைப்பீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி மனுவில் உத்தரவு பிறப்பிக்கும் சமயம் 3ம் பிரதிவாதிக்கு வயது 17 என்றும், எனவே, 3ம் பிரதிவாதி ஒருவருட காலம் கழித்து பெரிய வயதை அடைந்துவிடுவார் எனவும், அவ்வாறு அடைந்தபிறகு கிரையம் செய்துகொள்ளலாம் என 4ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டார் என்றும், பின்னர் 3ம் பிரதிவாதி 26.02.2007 தேதியன்று பெரிய வயதை அடைந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**7.2)** 3ம் பிரதிவாதிக்கு 18 வயது நிறைவடைவதற்கு ஒருவார காலத்திற்கு முன்பே அவருக்கு திருமணம் நடைபெற்றது என்றும், பின்னர் சொத்தை விற்பனை செய்வதுகுறித்து கேட்டபோது 3ம் பிரதிவாதி தனது கணவரை ஆலோசித்து கூறுவதாகவும், தனது தந்தையான 4ம் பிரதிவாதியின் சொத்துக்களை விற்பதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும், பின்னர் கடந்த 05.06.2007ம் தேதியன்று ரூ.2,00,000/- முழுதொகை கொடுத்து 4ம் பிரதிவாதியின் பூமிகள் அளக்கப்பட்டு எல்லைகள் குறிப்பிடப்பட்டு 5ம் பிரதிவாதியால் சொத்து கிரையம் பெறப்பட்டது என்றும், தாவா சொத்தின் புஏ.3.22 விஸ்தீரணம் உள்ள பூமிகள் 5ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, அவரது தனிப்பட்ட அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்துக்களானது கடந்த 13.03.1987ம் தேதியன்று 3ம் பிரதிவாதிக்கு தாயாரும், 4ம் பிரதிவாதிக்கு மனைவியுமான வள்ளியம்மாளுக்கு, அவரது தாயார் ராஜம்மாள் எழுதிவைத்த இருசெட்டில்மெண்ட் பத்திரப்படி பாத்தியப்பட்டது என்றும், வள்ளியம்மாள் கடந்த 31.12.1990ம் தேதியன்று காலமாகிவிட்டார் என்றும், அவருக்கு பின் 4ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியுமே மேற்படி செட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்ட சொத்துக்களை வருவாய்துறை ஆவணங்களை தங்களது பெயரில் மாற்றி அனுபவித்து வருகின்றனர் என்றும், 5ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ள சொத்திற்கும் வாதிக்கும் எந்தவிதமான பாத்தியமோ, பங்கோ கிடையாது என்றும், தகுந்த நீதிமன்ற கட்டணம் செலுததாமல் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், அவசியதரப்பினர்களை கட்சிசேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

8. **விசாரணை நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 6, 7 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்:–**

இ.ம.எண்.04/2021 மற்றும் இ.ம.எண்.03/2021 மூலம் வாதி அசல் வழக்கில் புதிய IV (b) என்ற பத்தியை சேர்த்துள்ளார் என்றும், சிவசுப்பிரமணியம் மற்றும் அவரது சகோதரர் 2ம் பிரதிவாதியான ஆறுமுகம் ஆகியோர்கள் தனது தகப்பனார் காளியப்பகவுண்டரின் சொத்துக்களை வாய்மொழியாக பாகம் செய்துகொண்டனர் என்றும், மேற்படி பாகப்படி சிவசுப்பிரமணியத்திற்கு கிடைத்த சொத்துக்களை அவர் 6, 7 பிரதிவாதிகளுக்கு நல்ல மனநிலையுடன் கடந்த 12.12.1990 தேதியன்று உயில் எழுதிவைத்தார் என்றும், மேற்படி சிவசுப்பிரமணியம் இறந்தபிறகு மேற்படி உயில் அமுலுக்கு வந்து வருவாய்துறை ஆவணங்களை 6, 7 பிரதிவாதிகள் தங்களுது பெயருக்கு மாற்றி அனுபவித்து வருகிறார்கள் என்றும், அவ்வாறு 6, 7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாதி பாகப்பிரிவினை கோர முடியாது என்றும், எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

9. **விசாரணை நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்:**

தாவா சொத்துக்கள் முழுவதையும் காளியப்பகவுண்டர் தனது பூர்வீகச் சோத்துக்களோடு சேர்த்து (Blending of properties) ஒன்றாக வைத்து அனுபவித்து வந்ததால் சொத்துக்கள் முழுவதும் காளிப்பகவுண்டரின் குடும்பசொத்துக்கள் என்றும், அதில் வாதியின் உரிமையை மறைத்து ஆவணங்கள் ஏற்படுத்துவது வாதியை கட்டுப்படுத்தாது என்றும், மேலும், 1ம் பிரதிவாதியின் எதிர்வாதத்தின் 6, 9, 11, 13, 23 மற்றும் 24 ஆகிய பத்திகளில் பல ஆவணங்களை

குறிப்பிட்டிருந்தாலும், அவை ஏற்படுத்தப்பட்ட தேதிகள், பத்திர பதிவு விபரங்கள் மற்றும் பதிவு எண்கள் போன்ற எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றும், அதிலிருந்தே அத்தகைய ஆவணங்கள் கற்பனையானவை மற்றும் வழக்கிற்காக பொய்யாக தெரிவிக்கப்பட்டவை என்றும், 1ம் பிரதிவாதி எதிர்வாதத்தில் குறிப்பிட்டிருந்து ஆவணங்களை தாக்கல் செய்ய அறிவிப்பு வழங்கப்பட்டபோதிலும் ஆவணங்கள் முழுமையாக தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே, 1ம் பிரதிவாதியிடம் மேற்படி ஆவணங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் பின்னாளில் தாக்கல் செய்யாதிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளார் (Estopped) என்றும் கூறப்பட்டுள்ளது.

**9.2)** 1ம் பிரதிவாதியின் எதிர்வாதம் வழக்கை திசை திருப்பவேண்டிய சொல்லப்பட்டுள்ளதால் Pleading must be specific என்ற சட்ட நிலைப்பாட்டிற்கு எதிராக உள்ளதால் 1ம் பிரதிவாதியின் எதிர்வாதம் முழுமையாக தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், மேலும் ராஜம்மாள், சிவசுப்ரமணியம் மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து வள்ளியம்மாள் பெயரில் ஆவணங்கள் எழுத எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே, வள்ளியம்மாள் காலமானது 3, 4 பிரதிவாதிகள் 3ம் நபர்களுக்கு சொத்துக்களை கிரையம் கொடுக்க எவ்வித உரிமையும் கிடையாது என்றும், அவ்வாறு ஆவணங்கள் ஏதும் வாள்ளியம்மாள் பெயரில் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அவை வாதியின் பாக உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், பொதுகுடும்ப பைசல்படி 12.12.1990ம் தேதியில் பொதுவில் சரிபாதி சொத்துக்களை சிவசுப்பிரமணியம் 6, 7 பிரதிவாதிகள் பெயரில் உயில் எழுதிவைத்தார் என்பதையும், மேற்படி உயில் நடைமுறைக்கு வந்துள்ளது என்பதையும் 1ம் பிரதிவாதியே நிரூபிக்கவேண்டும் என்றும், பாகப்பிரிவினை ஏற்படாமல் மேற்படி ஆவணங்கள் எதுவும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும், மேற்படி ஆவண விபரங்கள் வாதிக்கு

தெரியும் என்பதும் வழக்கிற்காக சொல்லப்பட்டுள்ள பொய் என்றும், எதிர்வாதம் 12ம் பத்தியில் சொல்லப்பட்ட குத்தகை விபரம் வாதி பாகம் பெறுவதை தாமதப்படுத்தவும், வில்லங்கப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டது என்றும், ராஜம்மாளுக்கு பாத்தியப்பட்ட தாவா பி அட்டவணை சொத்தில் வாதிக்கு ¼ பங்குள்ளது என்பதை ஏற்றுக்கொண்டுள்ள 1ம் பிரதிவாதி, வழக்கு ஏ அட்டவணை சொத்துக்களில் வாதியின் பங்கை மறுத்துள்ளது முன்னுக்குபின் முரணானது என்றும் கூறப்பட்டுள்ளது.

**9.3)** 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் கூறியுள்ள மற்ற சங்கதிகள் தவறானது என்றும், மேலும், 2ம் பிரதிவாதி தனது எதிர்வாதத்தில் கூறியுள்ள சங்கதிகள் தவறானது என்றும், பிரதிவாதிகள் எதிர்வாதத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களும், அதை ஏற்படுத்தியதாக சொல்லப்பட்டுள்ள நபர்களுக்கு வழக்குசொத்துக்களில் தனிப்பட்ட உரிமை எதுவும் ஏற்படுத்தாது என்றும், அது வாதியையும் கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி ஆவணங்கள் மூலம் உரிமை கோரும் பிரதிவாதிகள் அதை நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், 3ம் பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகள் தவறானது என்றும், வாதி கூட்டு உரிமையாளர்கள் Co-owner என்ற முறையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும், 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வாதம் முற்றிலும் சரியல்ல என்றும், 4ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற 5ம் பிரதிவாதியின் உரிமைகள் 4ம் பிரதிவாதிக்கு உள்ள உரிமைகளுக்கு கட்டுப்பட்டது என்றும், அதேபோல் 6, 7 இலக்கமிட்டவர்கள் அவர்களின் முன் பாத்தயஸ்தர்களுக்கு உள்ள சொத்துரிமைகளை மட்டுமே அடைய முடியும் என்றும், பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டவை என்றும், எனவே, வழக்கு வாதிக்கு சார்பாக செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

10. அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.41 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

11) விசாரணை நீதிமன்றத்தில் வனையப்பட்ட எழுவினாக்கள் விவரம்:–

(1) Whether the plaintiff is entitled for the relief of partition as prayed for ?

(2) Whether suit is bad for non-joinder of necessary party ?

(3) Whether the plaintiff has the right in the suit property?

(4) To what other relief?

**12) <u>கூடுதல் வழக்கெழுவினாக்கள் :–</u>**

(5) Whether the defendant No.5 is the absolute owner of the suit property who is in possession and enjoyment of the same?

13) <u>மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த குறிப்பாணையின் விபரங்கள் :</u>

பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கும் சாட்சியத்திற்கும் எதிரானது என்றும், மேல்முறையீட்டாளர் முன்னிட்டுள்ள ஆவண சாட்சியங்களையும், வாய்மொழி சாட்சியத்தையும் விசாரணை நீதிமன்றம் முறையாக கருத்தில் கொள்ளத் தவறியுள்ளது என்றும், 2, 3 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரரின் சகோதரிகள் என்றும், இவர்களுக்கு வள்ளியம்மாள் என்ற சகோதரி இருந்த நிலையில் அவரது கணவரையும், மகளையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், எனவே அவர்கள் 4, 5 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்

என்றும், 05.03.1955 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமும், 21.03.1963 ம் தேதியிட்ட உயில்சாசனத்தின் மூலமும் தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி அயிட்ட சொத்துக்கள் காளியப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், இரண்டாவது அயிட்ட சொத்து ராஜம்மாள் என்பவருக்கு 12.06.1978 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றும், கடந்த 17.03.2005 ம் தேதியன்று 1 ம் எதிர்மனுதாரர், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்துக்களை பாகம் பிரித்து தரக்கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பிற்கு 2 ம் எதிர்மனுதாரர் பதிலறிவிப்பு அனுப்பினார் என்றும், எனவே 1 ம் எதிர்மனுதாரர் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்றும், 2 ம் எதிர்மனுதாரர் விரிவான எதிர்வழக்குரையை தாக்கல் செய்திருந்தார் என்றும், அதில் மேற்படி உயில்சாசனத்தை பொறுத்து குறிப்பிட்டிருந்தார் என்றும், காளியப்ப கவுண்டர் இறந்துபோனபோது அவருடைய மகன் சிவசுப்பிரமணியம் உயிருடன் இருந்தார் என்பதையும், அவர் திருமணமாகாமல் இருந்தார் என்பதையும், அவரும் சொத்தில் ஒரு கூட்டுரிமையாளர் என்பதையும் விசாரணை நீதிமன்றமானது கவனிக்க தவறிவிட்டது என்றும், இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 6 ன் அடிப்படையில் சிவசுப்பிரமணியத்திற்கு 1/5 பங்கு வருகிறது என்றும், மேலும் விசாரணை நீதிமன்றமானது இந்து வரிசுரிமை சட்டம் பிரிவு 30 ஐ கவனிக்க தவறிவிட்டது என்றும், அதன்படி ஒரு கூட்டுரிமையாளர் அவருக்குண்டான சொத்தைப் பொறுத்து ஒரு உயில்சாசனம் எழுதி வைக்க உரிமையுள்ளது என்பது அதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும் அந்த உயில்சாசனம் சாட்சிகள் கண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த உயில்சாசனத்தில் உள்ள சாட்சி TSK.நடராஜ், பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு உயில்சாசனம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் விசாரணை நீதிமன்றம் தவறாக உயில்சாசனம் நிரூபணம் செய்யப்படவில்லை

என்று முடிவிற்கு வந்துள்ளது என்றும், சிவசுப்பிரமணியம் தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி செட்யூல் சொத்துக்களில் உள்ள பாதி பங்கை பொறுத்து உயில்சாசனம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், ஆனால் அந்த உயில்சாசமானது சிவசுப்பிரமணியத்தின் 1/5 பங்கை பொறுத்து மட்டும் தான் செல்லும் என்றும், அதனை விசாரணை கவனிக்க தவறிவிட்டது என்றும், ஆகவே 12.12.1990ம் தேதியன்று சிவசுப்பிரமணியம் எழுதி வைத்த உயில்சாசனமானது அவருடைய 1/5 பங்கை பொறுத்து தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி செட்யூலை பொறுத்து செல்லத்தக்கது என்றும், ஆனால் விசாரணை நீதிமன்றம் தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி செட்யூல் சொத்துக்களில் வாதிக்கு ¼ பங்கு உள்ளது என்று தவறாக முடிவிற்கு வந்துள்ளது என்றும், மேலும் உயில்சாசனம் 2ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேலும் உயில்சாசனம் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் உயில்சாசனத்தின் அடிப்படையில் சிவசுப்பிரமணியம் அவருடைய 1/5 பங்கை உயில்சாசனம் எழுதி வைக்க எவ்வித தடையும் இல்லை என்றும், எனவே, இம்மேல்முறையீட்டை அனுமதித்து, பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.465/2006ல் 20.06.2024ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து மேல்முறையீட்டு வழக்கை மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் அனுமதிக்கக் கோரியுள்ளார்.

14) இந்த மேல்முறையீட்டின் 1ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்த நிலையில் வழக்கானது அனுமதிக்கப்பட்டு தீர்ப்பாணை வழங்கியுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மீது இந்த மேல்முறையீடானது மனக்குறைவுற்ற 6, 7 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மேல்முறையீட்டில் இருதரப்பிலும் சாட்சிகளோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

15) இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில் இம்மேல்முறையீடு அனுமதிக்கப்பட வேண்டியதா? என்பதேயாகும்.

16) **தீர்வு** :-

வாதுரையின் வசதிக்காக விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்களோ அதேபோல் இந்த மேல்முறையீட்டிலும் அழைக்கப்படுவார்கள்.

16.1) வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை பரிசீலனை செய்யும்போது வாதி விசாரணை நீதிமன்றத்தில் தாவா சொத்துக்களைப் பொறுத்து ¼ பாகங்களாக நலந்திகடு கலந்து பிரித்து தரக்கோரி வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. விசாரணை நீதிமன்றமானது வழக்கை தீரவிசாரித்து வழக்கை பகுதியாக அனுமதித்துள்ளது என்பதும் தெரியவருகிறது. அதாவது தாவா ஒன்றாவது 1A மற்றும் 1B அயிட்ட சொத்துக்களில் வாதிக்கு ¼ பங்குரிமை உள்ளது என்றும், அதனை பிரித்து கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளது என்பது தெரியவருகிறது. தாவா இரண்டாவது அயிட்ட சொத்தைப் பொறுத்து விசாரணை நீதிமன்றம் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்பதும் தெரியவருகிறது. தற்போது இந்த மேல்முறையீடானது 6, 7 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

16.2) வழக்காவணங்களை பரிசீலனை செய்த வகையில் இறந்துபோன காளியப்ப கவுண்டருக்கு வாதி சம்பூரணம், 1ம் பிரதிவாதி சிவபாக்கியம், 2ம் பிரதிவாதி ஆறுமுகம், சிவசுப்பிரமணியம், வள்ளியம்மாள் மற்றும் காளியப்ப கவுண்டரின் மனைவியான ராஜம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்பது

தெரியவருகிறது. அதில் சிவசுப்பிரமணியம் வாரிசுகள் இல்லாமல் திருமணம் செய்துகொள்ளாமல் இறந்துவிட்டார் என்பது தெரியவருகிறது. மேலும் 1955ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பாகசாசனம் மூலம் காளியப்பகவுண்டருக்கு தாவா 1 அயிட்டம் ஏ செட்யூல் சொத்தும், காளியப்பகவுண்டரின் தகப்பனார் மாரிமுத்துகவுண்டர் என்பவர் 1962ம் ஆண்டில் எழுதிவைத்த உயில் சாசனத்தின் அடிப்படையில் தாவா 1 அயிட்டம் பி செட்யூல் சொத்தும், காளியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், மேலும் 11.06.1978ம் தேதியிட்டதும், காளியப்பகவுண்டரால் தனது மனைவியின் பெயரில் கிரையம் பெற்றப்பட்டதுமான, தாவா அயிட்டம் 2 சொத்துக்களும் காளியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா ஒன்று, இரண்டு அயிட்ட சொத்துக்கள் காளியப்பகவுண்டருக்கு பாத்தியம் என்று கூறி வாதி வழக்கை தாக்கல் செய்து அதில் வாதிக்கு ஒன்றாவது ஏ மற்றும் பி அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிக்கு ¼ பங்குரிமையுள்ளது என்று விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்பது தெரியவருகிறது.

16.3) மேலும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும்போது காளியப்பகவுண்டர் இறந்தபின்னர் அவர் விட்டுசென்ற சொத்துக்களைப் பொறுத்து வாய்மொழி பாகமும், குடும்ப ஏற்பாடும் ஏற்பட்டது என்றும், காளியப்பகவுண்டர் மனைவி ராஜம்மாள், 3ம் பிரதிவாதியின் தாயார் வள்ளியம்மாளுக்கு 1987ம் ஆண்டில் செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதிவைத்ததாகவும், அதன் அடிப்படையில் இவ்வழக்கின் 3, 4 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்துக்கள் சென்றடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் தாவா ஏ செட்யூல் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாத பூர்வீக சொத்துக்கள் என்பது வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

16.4) மேலும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை பரிசீலனை செய்த வகையில் வழக்கின் 1, 2 மற்றும் 6, 7 பிரதிவாதிகள் காளியப்பகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு சொத்துக்களை அவரவர்கள் தனித்தனியாக வாய்மொழியாக பிரித்துக்கொண்டு, அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களின் சுவாதீனத்தை பெற்று வருவாய்துறை ஆவணங்கள் பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.23 வரை ஏற்படுத்தப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாக வாதிக்கு தெரிந்தே அனுபவம் செய்து வருவதாகவும், அதனால் வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித பாக உரிமையும் இல்லை என்று எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. 1, 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் தாவா சொத்துக்களில் ஒருபகுதியை காளியப்பகவுண்டர் உயிருடன் இருந்தபோது அவரது ஆண்மக்களான சிவசுப்பிரமணியத்திற்கும், 2ம் பிரதிவாதிக்கும் பாகம்பிரித்தாகவும், அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும், சிவசுப்பிரமணியம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 6, 7 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதிவைத்தாகவும் அதனை நிரூபிக்கும் விதமாக 2ம் பிரதிவாதியோ அல்லது 6, 7 பிரதிவாதிகளோ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்து அவர்களது தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொறுப்பு அவர்களையே சேரும் என்றும், மேலும், வாதியின் சகோதரரான திருமணமாகாமல் இறந்துபோன சிவசுப்பிரமணியம் அவருக்கு பாத்தியப்பட்ட பாதி சொத்தை அவருக்கு பின்னிட்டு 6, 7 பிரதிவாதிகள் அனுபவித்துகொள்ளவேண்டும் என்று ஏற்படுத்திவைக்க இறந்துபோன சிவசுப்பிரமணியத்திற்கு எவ்வித உரிமையும், அருகதையும் இல்லை என்றும், ஏன் என்றால் வாதி, 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான காளியப்பகவுண்டர் அவர்கள் இறக்கும்போது குடும்ப பொதுசொத்துக்கள் குறித்து எவ்வித ஏற்பாடும் செய்துவைக்காமல் இறந்துவிட்ட நிலையில், இறந்துபோன சிவசுப்பிரமணியன் எவ்வாறு தாவா வழக்குசொத்தில்

பாதி சொத்தை 6, 7 பிரதிவாதிகளுக்கு உயில்சாசனத்தின் அடிப்படையில் பிரித்து கொடுத்தார் என்பது ஏற்கும்படியாக இல்லை என்று விசாரணை நீதிமன்றம் முடிவிற்கு வந்துள்ளது என்பது தெரியவருகிறது.

16.5) இதனைப் பொறுத்து மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டபோதும், மேலும் மேல்முறையீட்டு குறிப்பாணையை பரிசீலனை செய்யும்போதும் காளியப்ப கவுண்டர் 01.10.1984 ம் தேதியில் இறந்துவிட்டார் என்பதும், ராஜம்மாள் 05.05.2005 ம் தேதியில் இறந்துவிட்டார் என்பதும், இவர்களின் ஒரு மகனான சிவசுப்பிரமணியம் 13.01.1994 ம் தேதியில் இறந்துவிட்டார் என்பதும், அவர் வாரிசுகள் இல்லாமல் திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்பதும் தெரியவருகிறது. சிவசுப்பிரமணியம் உயிருடன் இருந்தபோது 12.12.1990 ம் தேதியன்று அதாவது பி.வா.சா.ஆ.25 ஆன ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தை அவர் நல்ல மனநிலையுடனும், உடல் நலத்துடனும் இருந்தபோது அவருடைய சொத்தைப் பொறுத்து எழுதி வைத்தார் என்றும், அவர் 13.01.1994 ம் தேதியன்று இறந்துவிட்ட நிலையில் அவரது இறப்பிற்கு பின்னிட்டு உயில்சாசனமானது அமலுக்கு வந்தது என்றும், அந்த உயில் சாசனத்தில் அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்கள் மாற்றப்பட்டுவிட்டது என்றும், அவை தான் பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் என்றும், 1 ம் பிரதிவாதிக்கு அவரது சகோதரர் எழுதி வைத்த பி.வா.சா.ஆ.25 உயிலைப் பொறுத்து நன்கு தெரியும் என்றும், அந்த உயில் சாசனம் சிவசுப்பிரமணியம் இறந்ததற்கு பின்னிட்டு அமலுக்கு வந்து அதன்படி தரப்பினர்கள் சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதும் அவருக்கு நன்கு தெரியும் என்றும், மேலும் விசாரணை நீதிமன்றமானது தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி அயிட்ட சொத்துக்கள்

இறந்துபோன காளியப்ப கவுண்டரின் பிரிபடாத சொத்துக்கள் என்று முடிவிற்கு வந்து அதில் வாதி கோரிய பாகம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

16.6) மேலும் சிவசுப்பிரமணியம் எழுதி வைத்த உயில்சாசனம் ஏற்கும்படியாக இல்லை என்று விசாரணை நீதிமன்றம் முடிவிற்கு வந்துள்ளது என்பது தெரியவருகிறது. ஆனால் மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் காளியப்ப கவுண்டர் இறந்துபோனபோது அவருடைய மகன் சிவசுப்பிரமணியம் உயிருடன் இருந்தார் என்பதையும், அவர் திருமணமாகாமல் இருந்தார் என்பதையும், அவரும் சொத்தில் ஒரு கூட்டுரிமையாளர் என்பதையும் விசாரணை நீதிமன்றமானது கவனிக்க தவறிவிட்டது என்றும், இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 6 ன் அடிப்படையில் சிவசுப்பிரமணியத்திற்கு 1/5 பங்கு வருகிறது என்றும், மேலும் விசாரணை நீதிமன்றமானது இந்து வரிசுரிமை சட்டம் பிரிவு 30 ஐ கவனிக்க தவறிவிட்டது என்றும், அதன்படி ஒரு கூட்டுரிமையாளர் அவருக்குண்டான சொத்தைப் பொறுத்து ஒரு உயில்சாசனம் எழுதி வைக்க உரிமையுள்ளது என்பது அதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும் அந்த உயில்சாசனம் சாட்சிகள் கண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த உயில்சாசனத்தில் உள்ள சாட்சி TSK.நடராஜ், பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு உயில்சாசனம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் விசாரணை நீதிமன்றம் தவறாக உயில்சாசனம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவிற்கு வந்துள்ளது என்றும், சிவசுப்பிரமணியம் தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி செட்யூல் சொத்துக்களில் உள்ள பாதி பங்கை பொறுத்து உயில்சாசனம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், ஆனால் அந்த உயில்சாசமானது சிவசுப்பிரமணியத்தின் 1/5 பங்கை பொறுத்து மட்டும் தான் செல்லும் என்றும், அதனை விசாரணை கவனிக்க தவறிவிட்டது என்றும், ஆகவே 12.12.1990 ம் தேதியன்று சிவசுப்பிரமணியம் எழுதி வைத்த உயில்சாசனமானது அவருடைய

1/5 பங்கை பொறுத்து தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி செட்யூலை பொறுத்து செல்லத்தக்கது என்றும், ஆனால் விசாரணை நீதிமன்றம் தாவா ஒன்றாவது ஏ மற்றும் பி செட்யூல் சொத்துக்களில் வாதிக்கு ¼ பங்கு உள்ளது என்று தவறாக முடிவிற்கு வந்துள்ளது என்றும், மேலும் உயில்சாசனம் 2ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேலும் உயில்சாசனம் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் உயில்சாசனத்தின் அடிப்படையில் சிவசுப்பிரமணியம் அவருடைய 1/5 பங்கை உயில்சாசனம் எழுதி வைக்க எவ்வித தடையும் இல்லை என்று வாதிட்டார்.

மேலும் மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் **2019 (1) CTC 706 Radhamma and others Vs H.N.Muddukrishna and others** என்ற முன்தீர்ப்பை தாக்கல் செய்து அதில்

**Hindu Succession Act, 1956 (30 of 1956), Section 30** – Testamentary Succession – Mitakshara Law – Disposition of Undivided Share in Joint Family by Will – Legality – Joint Family – Rule of Survivorship – Coparcener of Joint Family executed Will disposing his Undivided Share – Law permits Coparcener to dispose of his undivided share in Mitakshara Joint Family property by Will or any Testamentary disposition – Strict rule against alienation – Relaxation – Legislature relaxed rule against alienation only in favour of disposition by way of Will of male Hindu in Mitakshara Coparcenary property என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

16.7) மேற்கண்ட முன்தீர்ப்பை பரிசீலனை செய்த வகையில் ஒரு சொத்தில் ஒரு கூட்டுரிமையாளருக்கு கிடைக்கும் பிரிபடாத பங்கை உயில்சாசனம் மூலம் எழுதிக்கொடுக்கலாம் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் முடிவிற்கு வந்துள்ளது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஆகவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பையும், மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த

குறிப்பாணையையும் இந்த வழக்கின் பி.வா.சா.2ன் சாட்சியத்தையும், பி.வா.சா.ஆ.25 உயில்சாசனத்தையும் ஒருசேர பரிசீலனை செய்யும்போது சிவசுப்பிரமணியம் தாவா ஒன்றாவது அயிட்ட சொத்தின் கூட்டுரிமையாளர் என்பது தெரியவருகின்ற நிலையில் அவருக்கு பாத்தியப்பட்ட 1/5 பங்கை உயில்சாசனம் மூலம் எழுதிக்கொடுக்கலாம் என்பது தெளிவாக தெரியவருகிறது.

16.8) ஆகவே மேற்கண்ட முன்தீர்ப்பையும், உயில்சாசனத்தில் கண்ட சாட்சியின் சாட்சியத்தையும் பரிசீலனை செய்யும்போது உயில்சாசனம் தெளிவாக நீதிமன்றத்தில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேலும் உயில்சாசனம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று விசாரணை நீதிமன்றம் முடிவிற்கு வந்துள்ளது தவறானது என்றும், அதனால் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மாற்றப்பட்டு மேல்முறையீட்டுதாரர்களுக்கு தாவா ஒன்றாவது அயிட்ட ஏ மற்றும் பி அயிட்ட சொத்துக்களில் 1/5 பங்கு கிடைக்கத்தக்கது என்று இந்த மேல்முறையீடு பகுதியாக அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

17) இறுதியாக,

1) இந்த மேல்முறையீட்டு வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) இவ்வழக்கின் செலவுத் தொகைகளை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர்,

என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M MANIKANDAN Digitally signed by M MANIKANDAN Date: 2026.04.17 17:54:18 +0530

சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

இரு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

M MANIKANDAN Digitally signed by M MANIKANDAN Date: 2026.04.17 17:54:24 +0530

சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

**<u>நகல்</u>**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி.

**Draft/Fair Judgment**
A.S.No.17/2024
17.04.2026

A.S.No.17/2024 SJ Pollachi